## பேருவளை பிரதேச சபை - 2020

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பேருவளை பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பேருவளை பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 2017 இன் 03 ஆம் அத்தியாயத்தின் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய முறைமையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது சரியாக பதிவதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் தாக்கம் ஏற்படுத்துகின்ற கொடுக்கல் வாங்கல் மாத்திரம் பதியப்படல் வேண்டும். |
| (ஆ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 2017 இன் பந்தி இலக்கம் 3.7 இன் பிரகாரம் நிறுவனம் தயாரித்த பாதீடுகளில் பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் அந்த காலப்பகுதிக்கான | 2021 ஆம் ஆண்டின் போது சரியாக பதிவதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அந்த நியமத்தின் 3.9 ஆம் பந்தியின் பிரகாரம் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான பெறுமதிகளை ஒப்பீடு செய்யக்கூடிய வகையில் தனித்தனியாக சமர்ப்பித்து அப்பெறுமதிகளுக்கிடையே ஏதாவது பொருண்மையான வேறுபாடுகள் காணப்படுமாயின் அவற்றுக்கான காரணங்களும் வெளிப்படுத்தப்படல் வேண்டும். எனினும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் ஒப்பீட்டுரீதியில் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (இ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 2017 இன் பந்தி இலக்கம் 5.14 இன் பிரகாரம் நிறுவனமொன்றினால் இருப்பு தொடர்பாக பயன்படுத்தப்படுகின்ற முறைமையை உள்ளடக்கி இருப்பு பெறுமதியிடலுக்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் அவ்வாறு வெளிப்படுத்தப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 2017 இன் பந்தி இலக்கம் 6.1 இன் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் போன்ற உற்பத்தி அல்லது பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குதல், | புதிய கணக்கீட்டு முறைமையின் பிரகாரம் நூலக புத்தகங்களின் பெறுமதியை இருப்பாக கணக்கீடு செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தமை. | பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏனையவர்களுக்கு வாடகைக்கு வழங்குவதற்காக அல்லது நிர்வாக ரீதியிலான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பயன்படுத்துவதற்கு வைக்கப்பட்டுள்ள மற்றும் ஒரு அறிக்கையிடல் காலப்பகுதியினை விட மேற்பட்ட காலத்திற்கு பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள கற்பனைச் சொத்துக்கள் ஆகும். அதன் பிரகாரம் நூலக புத்தகங்கள் மேற்கூறப்பட்ட நியதிகளை பூர்த்தி செய்திருந்தமையால் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் இனங்காணப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 4,924,431 தொகையான நூலக புத்தகங்களின் பெறுமதி இருப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (உ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 2017 இன் பந்தி இலக்கம் 6.20 இன் பிரகாரம் சகல வகுப்புக்களினதும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்காக மொத்த இழிவுப்பெறுமதியை தீர்மானிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட அளவிடலின் அடிப்படை வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக அவ்வாறான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக அளவிடல் நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மிகையில் அல்லது பற்றாக்குறையில் இனங்காணப்படாத மூலதன மானியப் பெறுமதி ரூபா 60,008,095 ஆக இருந்த போதும், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் அது ரூபா 119,967,749 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிமை மூலதனம் ரூபா 59,959,654 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | பரீட்சை மீதியில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் சீராக்கும் போது வேலை கடன்கொடுத்தோர் கைவிடப்பட்டமையால் இந்த தவறு ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அவ்வாறான தவறுகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | வேலை கடன்கொடுத்தோர் ரூபா 59,959,654 தொகையான மீதி நிதிக் கூற்றுக்களில் கைவிடப்பட்டதன் காரணமாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறைப் பொறுப்புக்கள் அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | தவறொன்றினால் ஏற்பட்டிருந்தமையால் எதிர்காலத்தில் அவ்வாறு ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | திரண்ட நிதியத்திற்காக சீராக்கப்பட்ட முன்னைய ஆண்டின் தவறுகளை சரிசெய்தலின் தேறிய பெறுமதி ரூபா 4,914,565 ஆண்டுக்கான உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்படாமையின் காரணமாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட நிதியக் கணக்கு மீதி மேற்கூறப்பட்ட பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | தவறொன்றினால் ஏற்பட்டிருந்தமையால் எதிர்காலத்தில் அவ்வாறு ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (ஈ) | 2020 ஆம் ஆண்டில் சொத்துக்களை மதிப்பீடு செய்யும் போது காணியின் பெறுமதியில் ஏற்பட்ட ரூபா 44,301,500 தொகையான அதிகரிப்பு மீள்மதிப்பீட்டு | எதிர்காலத்தில் மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கை ஆரம்பிப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | மீள்மதிப்பீடு சரியாக சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மிகையாக இனங்கண்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறின்றி ஆண்டின் நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்தலாக மூலதனமாக்கப்பட்டு மிகையில் அல்லது பற்றாக்குறையில் இனங்கண்டு மூலதன செலவின மானியமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (உ) | 2007 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 02 நங்கூரம் மற்றும் படகு இயந்திரங்களின் கிரயம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 இன் இறுதிக் கணக்குகளில் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். | சகல நிலையான சொத்துக்களும் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஊ) | 2017 ஆம் ஆண்டில் நன்கொடையாக கிடைத்த ரூபா 107,000 தொகையான 10 நீர்த்தாங்கிகள், பாத்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது பொருத்திகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 இன் இறுதிக் கணக்குகளில் சரிசெய்யப்படும் என அறியத்தருகின்றோம். | சொத்துக்கள் சரியாக வகைப்படுத்தப்பட்டு காண்பிக்கப்படல் வேண்டும். |
| (எ) | 2020 ஆம் ஆண்டில் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் சபைக்குச் சொந்தமான சகல கட்டிடங்களினதும் 2019 ஆம் ஆண்டின் போது காணப்பட்ட கிரயப்பெறுமதி 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான புதிய மதிப்பீட்டு பெறுமதியாக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கட்டிடத்திற்காக முறையான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு புதிய மதிப்பீட்டுப் பெறுமதி சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 இன் இறுதிக் கணக்குகளில் முறையான மதிப்பீடொன்றை மேற்கொண்டு புதிய மதிப்பீட்டுப் பெறுமதி சரியாக கண்டறிந்து கணக்கீடு செய்யப்படும். | முறையான மதிப்பீடொன்றை செய்து கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | மீளாய்வாண்டின் போது உரிமை மூலதன மாற்றங்களுக்கு தாக்கமளித்த மூலதன ஒதுக்க கணக்குகளில் ஏற்பட்ட முரண்கள் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டில் இறுதிக் கணக்கில் சரி செய்யப்படும் என அறியத்தருகின்றோம். | உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 44,086,074 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 71,961,970 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினரிடமிருந்தும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 36,592,795 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 58,640,190 ஆகும். | நிலுவைப் பணம் கிடைத்திருக்கவில்லை. | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 10 துணைப்பாகங்களை உள்ளடக்கிய மென்பொருள் முறைமையொன்றை பிரதேச | எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளுக்காக | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் கீழ் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | சபையில் ஸ்தாபிப்பதற்காக தனியார் கம்பனியொன்றுக்கு 2018 ஆம் ஆண்டில் ரூபா 4,645,000 தொகை செலுத்தும் போது மேல் மாகாண பிரதம செயலாளரின் 2011 ஒக்தோபர் 18 ஆந் திகதிய தேசிய மற்றும் பயிற்சி சுற்றறிக்கை இலக்கம் 01/2011 இன் பிரகாரம் அலுவலக செயற்பாடுகளை கணனிமயப்படுத்தும் போது மேல் மாகாண தகவல் மற்றும் வள அதிகார சபையிலிருந்து விசாரணை செய்து ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் அல்லது ஏனைய தனியார் நிறுவனமொன்று நிறைவேற்றுவதாயின் அதற்கான கிரய மதிப்பீடு தயாரித்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு அல்லது பெறுகைகள் குழுவிற்கு சமர்ப்பித்து அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | கிரய மதிப்பீடு தயாரித்து அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கூறுவிலைகோரும் போது சாத்தியமாக வெற்றிகரமாக 12 உள்ளுராட்சி நிறுவனங்களுக்கு மேற்பட்ட அளவில் இந்த முறைமையை அமுல்படுத்திய வழங்குனர்களுக்கு மாத்திரம் கூறுவிலை சமர்ப்பித்தல் வரையறுத்தமையினால் தகைமை உள்ள ஆர்வம் காட்டுகின்ற தரப்பினர்களுக்கு பெறுகைகளுக்கு பங்குபற்றும் நியாயமான சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | தேசிய மட்டத்தில் பகிரங்கப்படுத்தலை வழங்குவதன் மூலம் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கிரய மதிப்பீடு தயாரித்து தேவையான அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |
| (இ) | கேள்வி நிபந்தனை இலக்கம் 03 மற்றும் 10 இன் பிரகாரம் 12 உள்ளுராட்சி நிறுவனங்களுக்கு மேற்பட்ட அளவில் இந்த முறைமை வெற்றிகரமாக அமுல்படுத்தப்படுவதாக அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய | இந்த முறைமை மூலம் கட்டணங்களை அறவிடுதல் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதுடன் மிகுதி பகுதியும் எதிர்காலத்தின் போது பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | தகைமை பெற்ற தரப்பினர்களுக்கு நியாயமான சந்தர்ப்பங்கள் வழங்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம் அந்த உள்ளூராட்சி நிறுவனங்களில் இந்த முறைமை வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டமை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 10 துணைப்பாகங்களை உள்ளடக்கிய மென்பொருள் முறைமையை ஸ்தாபிப்பதற்கு முன்னர் உடன்படிக்கை செய்த 2018 மார்ச் 20 ஆந் திகதி ரூபா 2,322,500 தொகையும், 2018 மார்ச் 21 ஆந் திகதி ரூபா 1,161,250 தொகையும், 2018 மார்ச் 22 ஆந் திகதி 1,161,250 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 4,645,000 முழுத்தொகையும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைக்கு புறம்பாக செலுத்தப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் பின்னர் மொத்த தொகையிலிருந்து 50 சதவீதமும், கணனி மயப்படுத்தலின் பின்னர் 25 சதவீதமும், பயிற்சி வழங்கியதன் பின்னர் மிகுதி 25 சதவீத பணமும் செலுத்தப்பட்டுள்ளது. | கேள்வி நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 10 துணைப்பாகங்களை உள்ளடக்கிய மென்பொருள் முறைமைக்கு இடையே ரூபா 2,550,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த 06 மென்பொருள் முறைமை இதுவரை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | மென்பொருள் முறைமையில் 10 துணைப்பாகங்கள் கணனியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | முறையான பிரகாரம் குறித்துரைத்த திகதியில் செலுத்தப்படல் வேண்டும். |
| (ஊ) | இரண்டாவது தரப்பினரால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்வி பத்திரத்தின் பிரகாரம் 10 துணைப்பாகங்களை உள்ளடக்கிய மென்பொருள் முறைமைக்கு மொத்தப் பணமும் செலுத்தியதன் பின்னர் வேறு 07 மென்பொருள் முறைமை இலவசமாக ஸ்தாபிப்பதற்கு இணங்ககியிருந்த போதிலும் இதுவரையிலும் சகல பணமும் செலுத்தி பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் இலவசமாக வழங்குவதற்கு இருந்த குறித்துரைத்த மென்பொருள் முறைமை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | இலவசமாக வழங்கப்படுகின்ற 07 மென்பொருள் முறைமை கணனியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. முறைமையில் 17 துணைப் பாகங்கள் தற்பொழுது செயற்படாமையினால் எதிர்காலத்தில் அதனை முழுமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அந்த மென்பொருள் முறைமையை விரைவாக ஸ்தாபித்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |